8. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு குறித்து முன்னாள் முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சராக இருந்த, என்றைக்கெல்லாம் தி.மு.க. மக்களால் விரட்டியடிக்கப்படுகின்றதோ அன்றைக்கெல்லாம், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவை நேருக்கு நேர் சந்திக்க தைரியம் இல்லாத, கருணாநிதி அவர்கள், இன்றைக்குப் பத்திரிகை வாயிலாக, ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள். ஆட்சிப் பொறுப்பேற்று, இந்த 100 நாட்களுக்குள்ளே அம்மாவினுடைய பல்வேறு சாதனைகளால் மக்களிடம் அம்மாவுக்கு ஏற்பட்டிருக்கின்ற செல்வாக்கை தாங்கிக்கொள்ள முடியாத கருணாநிதி, எதையாவது பார்த்து குறை சொல்லலாம் என்பதற்காக, பூதக் கண்ணாடியை வைத்துக்கொண்டு, தன்னுடைய பூதக் கண்ணாடியை போட்டுக்கொண்டு, தேடித் தேடிப் பார்த்து இன்றைக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே நாங்கள் என்ன சொன்னோமோ, அதையேதான் இன்றைக்கு இந்த ஆட்சியிலே, இந்த அமைச்சர் கொள்கை விளக்கக் குறிப்பிலே" என்று சொல்லியிருக்கிறார். "ஈயடிச்சான் காப்பி" என்று போட்டிருக்கிறார்கள். பத்திரிகையிலும் போட்டிருக்கிறார்கள். அதிலே என்ன சொல்லியிருக்கிறார் என்றால், "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையிலே, மானியக் கோரிக்கையின் விளக்கக் குறிப்பு அந்தத் துறையின் அமைச்சர் திரு. சி.வி. சண்முகத்தால் தயாரிக்கப்பட்டு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த 2011-2012 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பத்தி வருமாறு: "மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத்*

திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும்" என்பதாகும்.

பிற்பகல் 3-00

தி.மு.க அரசு வழங்கிய கொள்கை விளக்கக் குறிப்பில் "மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களுடைய ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும்" என்பதுதான். இவை இரண்டும் ஒன்றாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆனால், நான் சொல்வது என்னவென்றால், 2005-2006 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அமைச்சரவையிலே அன்றைக்கு விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த திரு. இன்பத்தமிழன் அவர்கள் இந்த அவையிலே வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலே என்ன சொல்லியிருக்கிறது என்று பார்க்கவேண்டும். "முன்னுரை— மனிதவள ஆதாரங்களின் மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களுடைய சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவைகளை வளர்த்து"—கமா (,) "உட்பட—அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும்". இப்போது யார் ஈயடிச்சான் காப்பி அடித்திருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) பாவம் அவருக்கு ஒன்றும் வேலையில்லை. இப்போது சினிமாக்காரர்கள் யாரும் அவரைக் கூப்பிட்டு விழா நடத்துவதில்லை, கவி அரங்கம் நடத்துவது இல்லை, செம்மொழி மாநாடு நடத்துவது இல்லை. அவர் அறிக்கை கொடுத்திருக்கிறார் விளையாட்டுத் துறை பற்றி. ஏனென்றால், பொறாமை காரணமாக. அன்றைக்கு அம்மா அவர்கள் விதி 110-ல் விளையாட்டுத் துறைக்காக இதுவரைக்கும் இந்தியாவிலே எந்த மாநிலத்திலே எந்த முதலமைச்சருமே செய்திராத மிகப் பெரிய ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவருக்கு அதுகூடத் தாங்கவில்லை. இங்கு இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பல்வேறு தலைவர்கள் எல்லாம் அந்த அறிவிப்புகளைக் கண்டு உண்மையிலேயே அவர்களை பாராட்டுகின்றார்கள். முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவைப் பாராட்டி சொன்னதை, அம்மாவைப் பாராட்டிச் சொன்னதை அவரால் தாங்க முடியவில்லை. ஆனால், இதே சட்டமன்றத்தில் கடந்த 5 ஆண்டு காலம் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது இங்கு என்ன நடந்தது என்பது இங்கு இருந்த உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். அதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாமல், விளையாட்டுத் துறையில் நாங்கள் சாதனை செய்யவில்லையா? தி.மு.க. ஆட்சியில் கவி அரங்கம், சங்கமத்துடன் சாதனையும் செய்யப்படும் என்று—ஆமாம். சாதனைகளும் செய்யப்படும். ராஜா, ராணி விளையாட்டு விளையாடினார்கள். ராஜா போனார். 'நீ முன்னாடி போ, நான் பின்னாடி வருகிறேன்' என்று சொல்லி, ராஜாவும் போய்விட்டார்கள், ராணியும் போய்விட்டார்கள். தமிழ்நாட்டிலிருந்து மத்திய அமைச்சராகி சிறையில் இருக்கின்ற முதல் உலகப் பெரிய சாதனையைச் செய்தவர் தமிழகத்திலிருந்து தி.மு.க. அமைச்சர்தான். அதுவும் ஒரு முதலமைச்சர் குடும்பத்திலிருந்து—டெல்லி திகார் ஜெயிலுக்கு தமிழ்நாட்டிலிருந்து போன முதல் மத்திய அமைச்சர், தி.மு.க அமைச்சர்தான்; முதலமைச்சர் குடும்பத்தினுடைய துணைவியாருடைய, மனைவி அல்ல, துணைவியாருடைய மகள் கனிமொழி. இதுதான் அவர்களுடைய சாதனை. ஆகவே, சட்டமன்றத்திற்கு வராமல் வெளியிலே இருந்துகொண்டு எதையாவது குறை சொல்லவேண்டுமென்பதற்காக சொல்வது: இதை நான் சொல்வதற்குக் காரணம் அவையினுடைய வாயிலாக, குறிப்பாக பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கவேண்டும் என்பதற்காக இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் 12-9-2011 திங்கட்கிழமை அன்று பதிலுரை வழங்குவார்கள்.